06.10.2025.

<u>கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் )</u>

<u>விழுப்புரம்</u>

<u>அமர்வு வழக்கு எண்.136/2024</u>

அ.சா. 5

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கங்காதரன் | | |
| த/பெ | கோவிந்தசாமி | | |
| கிராமம் | கொட்டியம் பூண்டி | தொழில் | விவசாயம் |
| தாலுக்கா | விக்கிரவாண்டி | வயது | 42/2025 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | 06.10.2025 |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்யவிக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது விவசாய வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசர், கைப்பற்றுதல் மகசரில் காட்டப்படும் 2ம் கையெழுத்து என்னுடையதாகும். அந்த கையெழுத்துகளை சுமார் 2 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் போலீசார் ஊருக்கு வந்ததற்காக அத்தாட்சியாக ஒரு கையெழுத்து போடுமாறு என்னிடம் இரண்டு எழுதாத வெள்ளை தாள்களில் கையொப்பம் வாங்கி சென்றார்கள். இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு வேறு எதுவும் தெரியாது. போலீசார் அதன் பிறகு என்னை விசாரணை செய்யவில்லை. பார்வை மகசரில் உள்ள 2-ம் கையெழுத்து அ.சா.ஆ.4 ஆகும். கைப்பற்றுதல் மகசரில் உள்ள 2-ம் கையெழுத்து அ.சா.ஆ.5 ஆகும்.

(சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதிகோரி அனுமதி வழங்கப்பட்டது.

அரசு தரப்பு குறுக்கு விசாரணை:-

தும்பூர் தாங்கல் கிராமத்தை சேர்ந்த கிருஷ்ணன் மகன் சுரேஷ் என்பவரை, ஜெயக்குமார் மற்றும் செல்வகுமார் ஆகிய இருவரும் சேர்ந்து, தாக்கிய கெடார் காவல் நிலைய வழக்கு சம்பந்தமாக, கஞ்சனூர் காவல் நிலைய வட்ட ஆய்வாளர் அவர்கள், விசாரணை செய்தும், சம்பவ இடம் குறித்து கடந்த 02/10/2023 ம் தேதி காலை 11.00 மணியளவில் ஒரு பார்வை மகசர், வரைபடம் தயார் செய்தார்கள் என்றும், அந்தப் பார்வை மகசரில் நானும், நீதி என்பவரும், கையொப்பம் செய்தோம் என்றும், பின்பு அன்று மதியம் 12.50 மணியளவில், அவர்களைத் தாக்க பயன்படுத்திய பிளாஸ்டிக் பைப்பை கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினார்கள் என்றும், அதிலும் நானும், நீதியும், கையொப்பமிட்டோம் என்று சொல்லிவிட்டு, தற்போது எதிரிகள் கேட்டுக் கொண்டதன் பேரில், உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

இல்லை.

மறுவிசாரணை

இல்லை